# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 824/2023
## வழக்கு சாட்சி PW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | சென்ட்ரிங் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 28th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி சாஸ்தா என்னுடைய தம்பி ஆவார். 18.09.2023 அன்று சாயங்காலம் 05.30 மணியளவில் என்னுடைய தம்பி சாஸ்தாவுக்கும், எதிரிக்கும் உள்ள பணப்பிரச்சனை காரணமாக நானும், என்னுடைய தம்பி சாஸ்தாவும் எதிரியின் வீட்டிற்கு சென்று என் தம்பிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கேட்டோம். அப்போது, எதிரி கத்திரிப்பானை எடுத்து என் தம்பியின் மார்பிலும், கன்னத்திலும் குத்தினார். நான் தடுத்தேன். அப்போது, என்னுடைய நெற்றியில் குத்தினார். பின்னர், என்னையும், என் தம்பியையும் ஆம்புலன்சில் தென்காசிஅரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். என்னுடைய தம்பி ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார். நான் 3, 4 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.29 19:22:14 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 824/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனி | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | நாராயணப்பிள்ளை | தொழில் | : | சோடா கம்பெனி |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 28th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் சோடா கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதினால் கையெழுத்துக்களை போட்டுக்கொடுத்தேன். அத்தாட்சியிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.29 19:22:22 +0530